இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 03 – சனிக்கிழமை 19 ஜூலை 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 339 : Thiruvalluvar Year - 2056 - Aadi 03 - Saturday 19 July 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்தை எடுத்துரைத்து

# தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட குரல் எழுப்புவோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் !



நாடாளுமன்ற தி.மு.க. மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நேற்று (18.7.2025) காலை, சென்னை – அண்ணா அறிவாலயம் – முரசொலி மாறன் வளாகக் கூட்ட அரங்கில், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும் நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவரும், துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி. அந்தியூர் செல்வராஜ், எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

**சென்னை, ஜூலை 19-**

**சென்னை அண்ணா அறிவாலயம் - முரசொலி மாறன் வளாகக் கூட்ட அரங்கில், நேற்று காலை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற, நாடாளுமன்ற மக்களவை - மாநிலங்களவை கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், “நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்தை எடுத்துரைத்து தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டக் குரல் எழுப்புவோம்!” எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (18-07-2025) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில்” நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:-

**கடந்த 11 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்தை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து, தமிழ்நாட்டுக்கான கல்வி – நிதி உள்ளிட்ட உரிமைகளை நிலைநாட்டுவோம்!**

ஜனநாயக உரிமைகளுக்காகவும் - மாநிலங்களின் உரிமைகளுக்காகவும், என்றென்றும் வலுவான குரலை எழுப்பி வரும் திராவிட முன்னேற்றக் கழகம், தேசிய அரசியலில் மிக முக்கியமான பேரியக்கமாகத் திகழ்கிறது.

ஒவ்வொரு முறை நாடாளுமன்றக் கூட்டத்தின் போதும், தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த குரலான தி.மு.கழகத்தின் குரல் - கழகத் தலைவர் அவர்களின் ஜனநாயக உரிமை முழக்கம் - கழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் குரலாக எதிரொலிக்கிறது. அந்தக் குரலைத் தான் நாடும் - நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளின் எம்.பி.,க்களும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களின்போது எதிர்பார்க்கிறார்கள். அதனை வழிமொழிகிறார்கள்.

தமிழ்நாட்டின் பிரச்சினைகளை மட்டுமின்றி, நாட்டின் மிக முக்கியப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பி, நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஜனநாயகப் பேரியக்கமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எதிர்வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மற்றும் அனைத்து மாநில முதலமைச்சர்களிடையே - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரான முதலமைச்சர் அவர்கள் கடந்த 24.5.2025 அன்று டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் வலியுறுத்திய, “காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளைச் சுத்தம் செய்து மீட்கும் புதிய திட்டம்”, “ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு, அனைவருக்கும் தொடர்பு மொழியாக இருக்கும் ஆங்கிலப் பெயர்களைச் சூட்டுதல்”, “மும்மொழிக் கொள்கையைத் திணித்து, பின்னர் மகாராஷ்டிரா மக்களின் எதிர்ப்புக்குப் பணிந்து பின்வாங்கி னாலும், அது பா.ஜ.க. ஆளும் மாநிலம் என்பதால் S.S.A. நிதியை அளித்து, தமிழ்நாட்டுக்கு S.S.A. நிதியை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மறுப்பது”,

“ஒன்றிய வரி வருவாயில் மாநிலங்களுக்கு 50 விழுக்காடு வரிப் பகிர்வு”, “15-ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி தர வேண்டிய 41 விழுக்காடு வரி வருவாய் பங்கிற்குப் பதிலாக 33.16 விழுக்காடு பங்கு மட்டுமே அளித்து மாநிலங்களுக்கு இழைக்கப்படும் நிதி அநீதி”, “ஒன்றிய அரசும் - மாநில அரசும் இணைந்து நிறைவேற்றும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்கு தொடர்ந்து உயர்ந்து வருவதால் ஏற்பட்டு வரும் நிதி நெருக்கடி” ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் அழுத்தமாக எடுத்துரைப்பதுடன்,

தமிழர்களின் தனித்துவமிக்க பண்பாட்டை அறிவியல்பூர்வமாக நிரூபித்த “இரும்பின் தொன்மை” குறித்து ஒன்றிய அரசு மவுனம் காப்பது, கீழடி ஆய்வறிக்கையை ஏற்க மறுப்பது, தமிழ்நாட்டிற்குரிய இரயில் திட்டங்களுக்கு நிதியளிக்காமல் வஞ்சிப்பது, உழைக்கும் கிராமப்புற மக்களுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட நிதியை முறையாக வழங்காமல் தாமதிப்பது, மாநிலத்தின் நிதி தன்னாட்சிக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கான நிதியுரிமையைப் பறிப்பது - எனத் தமிழ்நாடு தொடர்ச்சியாக வஞ்சிக்கப்படுவதைக் கண்டித்து, நமக்கான உரிமைக்குரலை ஓங்கி ஒலிப்பதுடன்,

ஜம்மு-காஷ்மீருக்கு மாநிலத் தகுதி கொடுக்காமல் தட்டிக்கழிப்பது, “வாக்காளர் சீர்திருத்தம்” என்ற பெயரில் பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் கோடிக்கணக்கானவர்களின் வாக்குரிமையைப் பறித்து ஜனநாயகத்தின் ஆணிவேரில் வெந்நீரை ஊற்றும் நோக்கில் தன்னாட்சி பெற்ற தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்துவது, தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து கைது செய்யப்படுவது, கச்சத்தீவு மீட்பு, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவது, திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்பது, தமிழ் உள்ளிட்ட அந்தந்த மாநிலங்களின் தாய்மொழிகளைப் புறக்கணித்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிப்பது, ஏழை - எளிய மக்களைப் பாதிக்கும் ரயில் கட்டண உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் எழுப்பிடவும்,

தமிழ்நாட்டின் நிதியுரிமை - மொழியுரிமை - கல்வியுரிமை ஆகியவற்றுடன் இந்தியாவின் கூட்டாட்சி உரிமை உள்ளிட்ட அனைத்திற்காகவும் வருகின்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.க்கள் உரக்க குரல் எழுப்பி, கடந்த 11 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டை வஞ்சித்து, தமிழர்களுக்கு எதிரான பண்பாட்டு ஊடுருவலை நிகழ்த்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாடாளுமன்ற இரு அவைகளிலும் கழக உறுப்பினர்கள் உறுதியாகவும் ஒருங்கிணைந்தும் வெளிப்படுத்துவார்கள் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

### ஆண்டாண்டு காலமாய் நெஞ்சில் சுமந்த கனவு நனவான நாள்! தாய் நிலத்துக்குத் தலைமகன்

## பேரறிஞர் அண்ணா ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்டிய நாள்!

### தமிழ்நாடு நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் - உணர்ச்சி மேலிடும் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 19 –**

**தமிழ்நாடு நாளையொட்டி, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (18.07.2025) விடுத்த வலைதளப் பதிவில். ‘‘தாய் நிலத்துக்குத் தலைமகன் பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு’’ எனப் பெயர் சூட்டிய நாள்! ஆண்டாண்டு காலமாய் நாம் நெஞ்சில் சுமந்த கனவு நனவான நாள் இந்நாள்!’’ என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு நாள் தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றில் தனிப் பெரும் நாள்!

ஜூலை 18, 1967: தி.மு.க. எனும் இயக்கம் ஆட்சிப் பொறுப் பேற்றதால் இம்மண்ணின் முகவரியின் முதல் வரியே மாற்றம் பெற்றது.

தமிழ்நாடு என்ற நம் உண்மைப் பெயரை அதிகாரப்பூர்வமாகப் பெற்று, ஆண்டாண்டு காலமாய் நெஞ்சில் சுமந்த கனவு நனவான நாள்.

அதுவரை இல்லாத சிறப்பாய்த் தாய்நிலத்துக்குத் தலைமகன் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டி ‘தமிழ்நாடு தமிழ்நாடு தமிழ்நாடு’ என மூன்று முறை பேரவையில் முழங்க, மேசையொலிகள் விண்ணதிர்ந்த இந்நாள்தான் தமிழ்நாடு நாள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்கள்குறிப்பிட்டுள்ளார்.

---

## பா.ஜ.க.வுடன் தேர்தல் ஆணையம் கைகோர்த்து செயல்படுகிறது !

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜூலை 19–

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் பா.ஜ.க.வுடன் கைகோர்த்து தேர்தல் ஆணையம் செயல்படுவதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. இதையொட்டி, கடந்த மாதம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை தலைமை தேர்தல் ஆணையம் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் உள்ள தகுதியவற்றவர்கள் பெயர் நீக்கப்படும், என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை நிரூபிக்க பிறப்பு சான்றிதழ் உள்ளிட்ட பல ஆவணங்களை தர வேண்டுமென்பதும் சர்ச்சையாகி உள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கையால் தகுதியான பல கோடி வாக்காளர்கள் வாக்குரிமையை இழக்க நேரிடும் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. இந்தியா கூட்டணி கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன.

இந்த நிலையில், வாக்காளர் விண்ணப் படிவங்களை பூத் அதிகாரிகளே பூர்த்தி செய்து கையெழுத்திட உத்தரவ வந்திருப்பதாக யூடியூபர் அஜித் அன்ஜூம் குற்றம் சாட்டியுள்ளார். இதனால், முதற்கட்டமாக 35 லட்சம் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை இழக்கப்போவது உறுதியாகி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதைச் சுட்டிக்காட்டி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், பீகார் சட்டபேரவை தேர்தலுக்கு முன்னதாக வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியில் தேர்தல் ஆணையம் மோசடி செய்வதாக குற்றம் சாட்டியுள்ளார். வாக்காளர்களின் வாக்குகளை தேர்தல் ஆணையம் திருடும் போது கையும் களவுமாக சிக்கியுள்ளதாக குறிப்பிட்ட அவர், சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் திருட்டு நடப்பதாக கடுமையாக விமர்சித்துள்ளார்.

இந்த முறைகேட்டை வெளிக்கொண்டு வருபவர்கள் மீது வழக்கு பதியப்படும். ஆங்கிலத்தில் ஈ.சி என்று அழைக்கப்படும் தேர்தல் ஆணையம் பா.ஜ.வின் தேர்தல் திருட்டு பிரிவாக முழுமையாக மாறி விட்டதா? என ராகுல் காந்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

---

### நாடாளுமன்ற கூட்டத்தொடர் 21-ம் தேதி தொடக்கம்

## நாடாளுமன்ற “இந்தியா” கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் இன்று நடைபெறுகிறது!

### நாளை - ஒன்றிய அரசு சார்பில் அனைத்துக்கட்சிக் கூட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 19-*

*மழைக்கால கூட்டத் தொடர் வருகிற 21ஆம் தேதி தொடங்க உள்ளதையொட்டி, இன்று டெல்லியில், நாடாளுமன்ற “இந்தியா” கூட்டணி கட்சிகளின் கூட்டம் நடைபெற உள்ளது.*

*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வருகிற 21ந் தேதி தொடங்கி அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. ரக்ஷா பந்தன் மற்றும் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்காக ஆகஸ்ட் 12 முதல் 18ஆம் தேதி வரை நாடாளுமன்ற தொடருக்கு இடைவெளிவிடப் படுகிறது.*

*இந்தக் கூட்டத்தொடரில் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.*

*தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா உள்ளிட்ட 8 புதிய மசோதாக்களை இந்த தொடரில் அறிமுகம் செய்ய ஒன்றிய அரசு முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.*

*இந்நிலையில், மழைக் கால கூட்டத்தொடர் தொடங்க உள்ளதையொட்டி, டெல்லியில், நாடாளுமன்ற “இந்தியா” கூட்டணி கட்சிகளின் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வீட்டில் இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*இதற்கிடையே. 20ஆம் தேதி காலை ஒன்றிய அரசு தரப்பில் அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.*